**DEPOSITION OF WITNESS**
**BEFORE THE ADDITIONAL MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL**
**AT PUDUCHERRY**

**MCOP No. 413 of 2024**
**PW – 1**

Name of the witness : Anusuya
Father's name : Neethipathi

Solemnly affirmed in accordance with the provisions of Indian Oaths Act X of 1873 and Oaths Act 44 of 1969 on this the 18th day of April 2026.

**2–ம் எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது சேதராப்பட்டில் உள்ள Eaton Power Quality Pvt. Ltd., என்ற நிறுவனத்தில் வேலை செய்கிறேன். மாத ஊதியம் ரூபாய் 55 ஆயிரம். விபத்து நடந்த சமயத்தில் நான் வேலை செய்து சம்பாதித்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

போலிசில் என் கணவர் புகார் கொடுத்தார். அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை. புகார் கொடுப்பதற்கு முன்பு என்னிடம் விசாரித்து விட்டு பின்னர் புகார் கொடுத்தாரா என்றால் ஆம். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து சாலையின் மத்திய பகுதியில் நடந்ததா என்றால் இல்லை இடதுபுறம் நடந்தது. விபத்திற்கு முன்பு என்னை இடித்ததாகச் சொல்லும் வாகனத்தை பக்கவாட்டு கண்ணாடி மூலம் பார்த்தேன். நான் பார்த்தபோது சுமார் 1 மீட்டர் தொலைவில் வந்தது. வாகனம் வருவதை பார்த்து நான் ஒதுங்கி செல்ல முயற்சித்தேனா என்றால் இல்லை. நான் முன்னதாகவே அந்த வாகனம் வருவதை பார்த்திருந்தால் நான் விலகியிருப்பேன் என்றால் சரிதான்.

எனக்கு சிகிச்சை முடிந்துவிட்டது. பிஸியோதெரபி சிகிச்சை மட்டும் எடுத்துவருகிறேன்.என் உடலில் எந்த உபகரணமும் பொறுத்தப்படவில்லை. விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் மட்டுமே நடந்தது என்றால் சரியல்ல. நான் வேலை செய்ததாக கூறுவதற்கு தாக்கல் செய்துள்ள அடையாள அட்டை, சம்பள பட்டியல் ஆகியவற்றை நானே தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.16 மற்றும் 17 வழக்கிற்காக நானே தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கு சம்பளம் எனது வங்கி கணக்கில் செலுத்தப்படும். எனது வங்கி கணக்கு பரிவர்தனை பட்டியலை பார்த்தால் நான் வேலை செய்து சம்பாதித்தேனா இல்லையா என்று தெரிந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த உடல் ரீதியான பாதிப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிஸியோதெரபி சிகிச்சை எடுத்துவருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது இடித்த வாகனத்திற்கு முறையான ஆவணங்கள் இல்லையென்பதால் 2–வது எதிர்மனுதாரர் பொறுத்து இழப்பீடு வழங்க பொறுப்பு இல்லையென்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

Take down by me in the open court and interpreted to the deponent and acknowledge by him / her to be correct.

Presiding Officer
Additional Motor Accident Claims Tribunal,
Puducherry